## சுருக்கம்

குடும்பநலத் திட்டம் – குடும்ப நல அறுவை சிகிச்சைக்குப்பின் பாதிக்கப்படும் ஏற்பாளர்களுக்கு தமிழ்நாடு குடும்பநல பல்நோக்கு நிதியிலிருந்து வழங்கப்படும் கருணை தொகையை ரூபாய் 5,000/–லிருந்து, ரூபாய் 30,000/–ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஆர்–2) துறை**

**அரசாணை (நிலை) எண்.150** **நாள்: 28.05.2014**
திருவள்ளுவர்ஆண்டு 2045
விஜய, வைகாசி–14

**படிக்க:**

1. அரசாணை (பல்வகை) எண்.415, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள்:24.07.1998.
2. அரசாணை (பல்வகை) எண்.183, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (ஆர்1) துறை, நாள்: 11.09.2006.

**மீண்டும் படிக்க**

3. குடும்ப நல இயக்குநர்(பொ), ந.க எண்.17714/கு3/ தஉ(ம)கா–1/ 2002, நாள்: 05.12.2012 மற்றும் 28.09.2013.

•••••

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 24.07.1998 முதலோ அல்லது அதற்கு முன்னரோ குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொண்டு பின் அது பயனற்றுப்போகும் நிலையில், குடும்ப நல அறுவை சிகிச்சை ஏற்பாளர்களுக்கு அரசின் கருணைத் தொகையாக ரூ.5,000/– மட்டும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ளடங்காத குடும்பநல ஏற்பாளர்களுக்கு தமிழ்நாடு அரசின் கருணைத் தொகையாக ரூ.5000/–மட்டும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி காப்பீட்டுத் திட்டத்தில் உள்ளடங்காத குடும்பநல ஏற்பாளர்களுக்கு தமிழக அரசின் கருணைத் தொகை ரூ.5,000/– மட்டுமே இதுநாள் வரை வழங்க பெற்று வருகிறது. பார்வை 3ல் காணும் கடிதத்தில் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல் அடிப்படையில் மைய அரசின் 08.12.2005 நாளிட்ட கடிதத்தின்படி குடும்பநல அறுவை சிகிச்சை பயனற்றுப்போதல், இறக்க நேரிடுதல் மற்றும் மருத்துவ இடர்பாடுகள் போன்ற நிகழ்வுகளுக்கு முறையே புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.30,000/–, ரூ.1,00,000/– மற்றும் ரூ.20,000/– வழங்கப்படுகிறது. இதற்கு மைய அரசால் தவணைக் கட்டணம் (Premium) காப்பீட்டு நிறுவனத்தில் கட்டப்பெற்று வருகிறது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட குடும்ப நல இயக்குநரின் கடிதத்தில், அரசின் கருணைத் தொகை ரூ.5,000/– போதவில்லை என்று சிலர் நீதிமன்றத்தை நாடுவதால் அரசுக்கு ரூ.3,00,000/– முதல் ரூ.4,00,000/– வரை நீதிமன்ற செலவினங்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்து, வாழ்வியல் செலவினங்கள் மிக அதிகளவில் உயர்ந்துள்ள இக்காலத்தில் பொதுவாக அரசு மருத்துவ நிலையங்களில் ஏழைகள் மற்றும் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள்தான் மிக அதிகமாக மகப்பேறுக்காகவும் குடும்பநல அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காகவும் வருவதாலும், 29.11.2005க்குப் பின்னர் குடும்பநல அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஏற்பாளர்கள் பயன்பெறுவதுபோல் 29.11.2005க்கு முன்னர் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து பயனிழந்த ஏற்பாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற தார்மீக அடிப்படையிலும், கருத்தடைக்குப்பின் பாதிக்கப்படும் ஏற்பாளர்களுக்கு தமிழக அரசால்

வழங்கப்பட்டு வரும் ரூ.5000/–ம் மத்திய அரசால் திரும்ப வழங்கப்பட்டு வருவதால், தமிழ்நாடு குடும்பநல பல்நோக்கு நிதித் தொகுப்பில் ஆண்டு தோறும் தொகை எஞ்சி விடுவதாலும், குறைந்த கருணைத் தொகை காரணமாக அக்குடும்ப நல ஏற்பாளர்கள் நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து மிகைப்பட்ட இழப்பினை ஏற்பாளர்களுக்கு வழங்குதல் மற்றும் நீதிமன்ற செலவுகள் மேற்கொள்ளுதல் போன்ற செலவுகளால் அரசுக்கு இழப்பீடு ஏற்படாத வகையிலும், 29.11.2005க்கு முன்னர் கருத்தடைக்குட்பட்டு பின்னர் அக்கருத்தடை பயனற்றுப் போகும் நிலைக்குட்பட்ட குடும்ப நல ஏற்பாளர்களுக்கு தற்போது தமிழ்நாடு குடும்ப நல பல்நோக்கு நிதியிலிருந்து வழங்கப்படும் கருணைத் தொகையான ரூ.5,000/– என்பதை உயர்த்தி ரூ.30,000/– ஆக அளிக்குமாறு குடும்ப நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. குடும்பநல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனத்துடன் பரிசிலித்து, அதனை ஏற்று 29.11.2005க்கு முன்னர் கருத்தடை செய்து கொண்ட பின்னர் அக்கருத்தடை பயனற்றுப்போகும் நிலைக்குள்ளான குடும்ப நல ஏற்பாளர்களுக்குத் தற்போது தமிழ்நாடு குடும்பநல பல்நோக்கு நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகையான ரூ.5,000/– என்பதை அரசு ரூ.30,000/–ஆக உயர்த்தி பயனாளிகளுக்கு வழங்கிட இதன் மூலம் ஆணை வெளியிடப்படுகிறது.

5. அரசாணை(நிலை) எண்.519 நிதித் (சம்பளம்) துறை, நாள்: 29.09.1997-ன் படி நிதித் துறையின் இசைவின்றி வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
குடும்பநல இயக்குநர், சென்னை–6.
மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்,
சென்னை–6.
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை–6.
குழும இயக்குநர்,
மாநில நலவாழ்வு சங்கம், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்.
அனைத்து இணைஇயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்.
அனைத்து துணைஇயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம்.
அனைத்து துணைஇயக்குநர், சுகாதார பணிகள்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 18/35
மாநில கணக்காயர், சென்னை–18.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்.
சம்பள கணக்கு அலுவலர் மதுரை.
<u>நகல்</u>
நிதி (சுகாதாரம்–1) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு (ம)குடும்பநல (டேட்டா செல்)பிரிவு சென்னை–9.
சுநு/இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 16/6/14

16.6.14.